பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை 05.01.2021 கதிர் 292

# மூன்றாவது அலை மூலம் 41,476 பேருக்குத் தொற்று

## 202 பேர் உயிரிழப்பு

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை மூலம் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் இன்றுவரை 41 ஆயிரத்து 476 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இதில் 202 பேர் பலியாகியுள்ளனர்.

2

# தேர்தலை நடத்தினால் அரசுக்குப் படுதோல்வி

## புலனாய்வுப் பிரிவு அதிர்ச்சி அறிக்கையாம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, மாகாண சபைகளுக்கான தேர்தலைத் தற்போது நடத்தினால் அரசுக்குக்கு மிகப் பெரிய தோல்வி ஏற்படும் என்கின்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

புலனாய்வுப் பிரிவுகளால் அரச உயர்பீடத்துக்கு வழங்கப்பட்ட இரண்டு அறிக்கைகளில் இந்தத் தகவல் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

# தேர்தலில் சிக்கல் நிலை; அதனால் முடிவு இல்லை

## கோட்டா அரசு கூறுகின்றது

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எவ்வித தீர்மானத்தையும் நாம் எடுக்கவில்லை. கொரோனா வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலேயே நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான

2



# அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க: பிணையாளர்களாகத் தமிழ் எம்.பிக்கள் தயார்!

## நாடாளுமன்றில் அரசிடம் சார்ள்ஸ் எம்.பி. எடுத்துரைப்பு



**கொரோனா என்ற கொடிய வைரஸ் நோய் தொற்றில் இருந்து தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமித்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணையாளர்களாகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தயாராக உள்ளோம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

2

## எமது உறவுகளை சிறைகளில் மடியவிட வேண்டாம்

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் ஆர்ப்பாட்டம்




(நமது நிருபர்கள்)

சிறைச்சாலைகளில் நீண்ட நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று காலை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சிவில் அமைப்புக்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

2

# வாவியில் காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

## முதலை கடித்தே மரணம்

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன குடும்பஸ்தர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று நள்ளிரவு 12 மணியளவில் குறித்த வாவிப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற புன்னைச்சோலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆரோக்கியநாதன் மரியதாஸ் (வயது 48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

2

# தொற்றுக்குள்ளான மூவருடன் கொழும்பில் தங்கியிருந்த எண்மர் இப்போது வடக்கிலாம்

வடக்கு மாகாணத்தின் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்று தங்கியிருந்த 11 பேரில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

2



## தொற்றுக்குள்ளான மூவருடன் கொழும்பில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வாரம் கொழும்பில் குறித்த 11 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

கொழும்பில் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகக் குறைந்தது 3 நாள்கள் ஆகும் என்பது நடைமுறையாகும்.

இந்நிலையில் பி.சி.ஆர். முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக 11 இளைஞர்களும் தமது ஊர்களுக்குத் திரும்பியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

நேற்றைய தினம் அவர்களுக்கான சோதனை முடிவுகள் வெளியாகியிருந்த நிலையில் அவர்களில் 3 பேருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது அடையாளம் காணப்பட்ட நிலையில் கொழும்பு சுகாதாரத் திணைக்களத்தினால் இளைஞர்கள் வதியும் மாவட்டங்களின் சுகாதாரத் திணைக்களங்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதனை அடுத்து குறித்த மூவரும் சுகாதார உத்தியோகத்தர்களால் அடையாளம் காணப்பட்டு இன்று முற்பகல் கொரோனாத் தடுப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஏனைய எட்டு இளைஞர்களும் உடனடியாக தனிமைப்படுத்தப்படவேண்டி உள்ளமையால் அவர்களைத் தேடும் நடவடிக்கையினை சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

## தமிழ் அரசியல் கைதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**யாழ்ப்பாணத்தில்**

அந்த வகையில், யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆதீனத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் கலந்துகொண்டார்கள்.

**வவுனியாவில்**

இதேவேளை, வவுனியாவிலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா காமினி மகா வித்தியாலத்துக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டவர்கள், இலங்கை அரசே தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய், எமது உறவுகளை சிறைகளில் மடியவிடவேண்டாம், தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதிகள் இல்லை, கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கு போன்ற வசனங்கள் அடங்கிய பாதாதைகளை ஏந்தியிருந்தியும், கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**கிளிநொச்சியில்**

அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கோஷங்கள் எழுப்பியதுடன் பொங்கல் பரிசாக அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

**மன்னாரில்**

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி மன்னாரிலும் ஆர்ப்பாட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுமத் தலைவர் ஜே.ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் சமூக அமைப்பினர் ஆகியோர் பங்கேற்றனர்.

பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர் ஊடகங்கள் முன்பாக வாசிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

**முல்லைத்தீவு**

அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் அமைப்பினர் ஆகியோரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவிலும் இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

**கிழக்கில்**

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் இன்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

'இலங்கை அரசே அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க' என்னும் தொனிப்பொருளில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார வழிமுறையைப் பின்பற்றியவாறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்து குருமார்கள், வணபிதாக்கள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டனர்.

## வாவியில் காணாமல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர் மீன்பிடிக்கச் சென்றபோது வாவியில் முதலையால் இழுத்துச் செல்லப்பட்டு சின்ன உப்போடையில் உள்ள களப்பு ஒன்றுக்குள் வைத்திருந்த நிலையில் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் சடலம் முதலை கடுமையாக சிதைத்துள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலகமாக மட்டக்களப்பு வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் உள்ளன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையைத் தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## தேர்தலை நடத்தினால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கண்டி, செங்கடகல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இதனைக் கூறினார்.

இந்த அச்சத்தின் காரணமாகவே கோட்டாபய அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்திவைத்து வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரச புலனாய்வுத்துறை இரண்டு பகுதிகளாகப் புலனாய்வு செய்திருக்கின்ற நிலையில் அதில் கோட்டாபய அரசின் படுதோல்வி நிச்சயமாக உறுதிசெய்யப்பட்டது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மூன்றாவது அலை மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மினுவாங்கொட, பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொத்தணிகள் மூலமே இவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது எனக் கொரோனாத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த நவம்பர் மாதத்தில் 17 ஆயிரத்து 472 பேருக்கும், டிசெம்பரில் 18 ஆயிரத்து 838 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் கொழும்பு மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் 4 முதல் இன்று வரை 18 ஆயிரத்து 869 தொற்றாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 720 தொற்றாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 556 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் 25 மாவட்டங்களிலும் மூன்றாவது அலை மூலம் வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களில் 37 ஆயிரத்து 816 பேர் குணமடைந்துள்ளனர்.

# இலங்கை வந்தார் ஜெய்சங்கர்



கொழும்பு, ஜன.05

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வந்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், இன்று பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இவர் எதிர்வரும் 7ஆம் திகதி வரை இலங்கையில் பல்வேறுமட்ட பேச்சுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோருடன் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார்.

மேலும் பல பிரமுகர்கள், வணிகத் தலைவர்களை அவர் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு இலங்கைக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரி இவர் என்பதுடன் இந்த ஆண்டின் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கைதிகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களில் சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் சார்பில் இன்று காலை 10 மணிக்கு கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் இடம்பெற்றது உரிமைப் போர். அதில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் இன்று கொரோனாவின் பிடிக்குள் சிக்கியுள்ளனர். எனவே, அவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதன் நிமித்தம் அவர்கள் அனைவரையும் உடனடியாக அரசு விடுதலை செய்யவேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பிணை வைப்பதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தயாராக உள்ளோம் என்பதையும் ஜனாதிபதியிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதனை சபையில் மக்கள் சார்பில் முன்வைக்க விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டு அதனால் இத்தனை தாக்கங்கள் ஏற்பட முழுமையான காரணம் ஜனாதிபதியே. அவரே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். ஒரு சிறிய தீவுக்குள் - குறுகிய மக்கள் தொகை வாழும் இந்த நாட்டுக்குள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாதமைக்குப் பிரதான காரணம் பொறுப்புக்களை சுகாதாரத்துறையிடம் இருந்து பிடுங்கி இராணுவத்துக்கு வழங்கியமையேயாகும். இதுதான் நாடு மிகப்பெரிய தோல்வியைச் சந்திக்கக் காரணமாக அமைந்துள்ளது.

அரச தரப்பினர் இராணுவத்தை வைத்து நாட்டு மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிவருகின்றனர். தேர்தல் வெற்றியை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு அரசு தீர்மானம் எடுக்கின்றது. அப்போது இருந்த நிலையில் இன்று இந்த நாட்டு மக்களின் மனநிலை இல்லை என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். என்றார்.

## தேர்தலில் சிக்கல் நிலை; ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

மாகாண சபைக்கு எதிரான போராட்டங்களை அரசுக்கு எதிரான போராட்டமாக மாற்றி விட வேண்டாம் என ஒரு தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு அரசு ஒருபோதும் அஞ்சாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. ஆகவே, இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எவ்வித தீர்மானத்தையும் அரசு எடுக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

பொருளாதாரத்தை மேம்படுத்த அரசால் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அதிக நிதி அவசியமாகும். ஆகவே, நெருக்கடியான சூழ்நிலையில் தேவையற்ற செலவுகளைக் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட முடியாது என்ற காரணத்தால் அதிக நிதி மருத்துவத்துறைக்கும், பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார்.

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இனவெறி விதி முறைகள்

"ஊசி போகும் இடம் பார்ப்பார். உலக்கை போகும் இடம் பாரார்" என்பார்கள்.

பேரினவாத இனவெறியில் செயற்படும் கொழும்பு அரசின் போக்கு இத்தகையதாகத்தான் இருக்கின்றது.

கொரோனா வைரஸ் கொடூரம் உலகளாவிய நெருக்கடி. எதிரி நாடுகள் கூட இந்த உலகளாவிய பிரச்சினையை ஒன்று பட்டு எதிர்கொள்வதற்கான வழிவகைகளை நாடி ஓடிக் கொண்டிருக்கின்றன. கிராமங்கள், நகரங்கள், மாவட்டங்கள், மாகாணங்கள் கடந்து, தேசங்கள் தாண்டி, சர்வதேசங்களும் ஒன்று பட்டு, கூட்டாக இந்த நெருக்கடியை எதிர்கொண்டால் மட்டுமே இந்தப் பேரழிவிலிருந்து மீள முடியும் என்ற உண்மை உறைப்பாக உணரப்பட்டமையால், எதிரித் தேசங்கள் கூட கொரோனாக் கொடூரனுக்கு எதிராக ஒன்று சேர்ந்து இயங்க முன்வந்துள்ளன. தமக்கிடையேயான எதிரித் தன்மையைத் தள்ளி வைத்து விட்டு, பொது எதிரியான கொரோனா அரக்கனை எதிர்கொள்வதற்காக எப்படி ஐக்கியப்பட்டுக் காரியமாற்றுவது என்று உலக சமூகம் கணக்கிடுகின்றது.

ஆனால், பௌத்த சிங்களப் பேரினவாத இன வெறியில் செயற்படும் சிங்கள ஆட்சிப் பீடம் மட்டும், அந்த மேலாண்மைத் திமிருடன் இனங்களைப் பிரித்துத்தான் இந்த நெருக்கடியையும் எதிர்கொள்கின்றது.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை எரிக்கலாம் அல்லது பாதுகாப்பான முறையில் புதைக்கலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் வழிகாட்டுகின்றது. பக்கத்தில் உள்ள பெரும் தேசமான இந்தியா உட்பட நூற்றுக்கும் அதிகமான நாடுகள் அப்படித்தான் செய்கின்றன.

ஆனால் இலங்கையில் நிலைமை வேறு. இனவாத ரீதியில் இந்த விடயத்தை அணுகுகின்றது அதன் ஆட்சிப் பீடம்.

இஸ்லாமிய மார்க்கத்தின்படி, உயிரிழப்போரின் சடலங்கள் புதைக்கப்பட வேண்டும், எரிக்கப்படக் கூடாது. ஆனால் இது விடயத்தில் வேண்டுமென்றே ஒற்றைக் காலில் நிற்கின்றது கொழும்பு ஆட்சிப் பீடம். உலக நாடுகள் எல்லாம் கொரோனாத் தொற்றில் உயிரிழந்தோரின் சடலங்களை எரிக்க, இங்கு மட்டும் விஞ்ஞான ரீதியான காரணங்களால் அதற்கு அனுமதிக்க முடியாது என்று கதை அவிழ்த்து விடப்படுகின்றது.

இந்த நாட்டின் சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம்களுக்கு எதிரான, இஸ்லாமிய இனத்துவே நிலைப் பாட்டைப் பகிரங்கமாக எடுத்து, அந்தப் பேரினவாத வெறிப் போக்கையே தனது நெறியாகக் காட்டி, தென்னிலங்கைச் சிங்கள மக்களின் வாக்குகளைச் சூறையாடி, ஆட்சிக்கு வந்த அதிகார பீடம், அந்த வெறிப் போக்கில் தொடர்ந்தும் நெறி இழந்து, அட்டகாச நிலைப்பாட்டைக் கைக் கொள்கிறது.

விஞ்ஞான, மருத்துவ முடிவு என்று காட்டி, இஸ்லாமியர்களின் அடிப்படைக் கோட்பாட்டை – கொள்கைச் செயற்பாட்டை – தூக்கிக் கடாசி அவர்களை மன நோகடிக்கச் செய்து, அவமானப்படுத்தி, அதன் மூலம் தனது வாக்கு வங்கியான பேரினவாத வெறியர்களைத் திருப்திப்படுத்தி, தனது குரோத முகத்தைக் காட்டி நிற்கின்றது பௌத்த, சிங்கள மேலாண்மைவாதம்.

நிலத்தடி நீரை நம்பியிருக்கும் நமது நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் சடலங்களைப் புதைத்தால் நில நீர் வழியாக கொரோனா வைரஸ்கள் பரவலடைந்து விடுமாம். உலக சுகாதார ஸ்தாபன நிபுணர்களுக்குத் தெரியாத இந்த விஞ்ஞான உண்மை, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் பௌத்த, சிங்கள வெறிப் போக்காளர்களின் 'எடுபிடி' களான நம் நாட்டுப் 'பேரறிஞர்களுக்கு' நன்கு தெரிந்திருக்கின்றமை விந்தையிலும் விந்தை.

இவ்வளவு தூரம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தீவிரமாக இருக்கும் அரசு – புதைத்த சடலங்களில் இருந்து நிலம் வழியாக வைரஸ் பரவி விடும் என்ற அளவுக்குக் கண்ணும் கருத்துமாக இருக்கும் நமது நாடு – உலகில் கொரோனாத் தொற்றிலும், பரவுகையிலும், உயிரிழப்பிலும் முன்னணியில் இருக்கும் உக்ரைன் நாட்டிலிருந்து, கண்மண் தெரியாமல் ஆயிரக் கணக்கில் சுற்றுலாப் பயணிகளை 'இறக்குமதி' செய்து இரண்டு வார காலத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தாமலேயே நாட்டில் சுற்றுலாவுக்கு விட்டிருப்பது மிகவும் நகைப்புக்கிடமானது.

இதைத்தான் 'ஊசி போகும் இடம் பார்ப்பார்; உலக்கை போகும் இடம் பாரார்' என்று கூறுவது போலும்.


ஏற்கனவே கூட்டமாக – குழுவாக – வந்த சுற்றுலாப் பயணிகளில் அறுவருக்குக் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர்களுடன் வந்த எவருமே அன்று முதல் இரண்டு வார காலத்துக்குத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்ற தகவல் இல்லை.

அந்த அறுவர் மூலம் தொற்றைப் பெற்றுக் கொண்ட எத்தனை சக சுற்றுலாப் பயணிகள் அவற்றை காவிச் சென்று நமது நாட்டுக்குள் பரப்பியிருப்பார்களோ...?

இப்படி உரிய பாதுகாப்பின்றி, ஏற்கனவே கொரேனாத் தொற்றின் உச்சத்திலிருக்கும் நாட்டிலிருந்து கண் மூடித்தனமாக சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கலாம் என்றால், தொற்றால் இறப்போரை புதைக்கவே முடியாது என அடம்பிடிப்பது அர்த்தமற்ற கட்டுப்பாடாகும்.

# 3.9 வீதத்தால் எதிர்மறை வளர்ச்சியை காட்டுகின்றது நாட்டின் பொருளாதாரம்!

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



2020 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதம் முறை 3.9 வீதத்தில் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மனன் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவலின் தாக்கம் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 2020 ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியிலே நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்ததுடன், 3 ஆவது காலண்டில் ஓரளவு முன்னேற்றம் காணப்படுவதாகவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 2021 ஆம் ஆண்டு முழுவதும் ஒற்றை இலக்க வட்டி விகிதத்தை நடைமுறைப்படுத்த மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் லக்ஷ்மனன் மேலும் தெரிவித்துள்ளார்.

சவாலான உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் பொருளாதாரத்துக்குப் போதுமான உத்வேகத்தை வழங்க நாணய மற்றும் நிதி தலையீடுகள் மூலம் தொடர்ச்சியான ஆதரவு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொடர்ந்தும் தனிமையில் காத்தான்குடிப் பிரதேசம்!

## மட்டு.மாவட்ட அரச அதிபர்



எதிர்வரும் 15 ஆம் திகதி வரை காத்தான்குடி பகுதி தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்படும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) மாலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை ஞாயிறு இரவு முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாக காத்தான்குடி பிரதேச செயலக பிரிவு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அங்குள்ள மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக இதுவரையில் 13 ஆயிரத்து ஒரு குடும்பங்களை சேர்ந்த 43 ஆயிரத்து 387பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதமரின் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு நவீனமயப்படுத்தப்பட்ட நிலையில் திறப்பு!





நவீனமயப்படுத்தப்பட்ட பிரதமரின் பொது மக்கள் தொடர்பாடல் பிரிவு நேற்று (திங்கட்கிழமை) முற்பகல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொள்ளுபிட்டி, ஆர்.ஏ.டி மெல் மாவத்தையில் திறந்து வைக்கப்பட்டது.

மஹாசங்கத்தினரின் பிரித் பாராயணத்தை தொடர்ந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர், மங்கள விளக்கேற்றி பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிகளை சுபநேரத்தில் ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு – 03, கொள்ளுபிட்டி ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, இல.101 என்ற இடத்தில் அமைந்துள்ள இந்தப் பிரிவு பொதுமக்களின் வசதிக்காக நவீனமயப்படுத்தப்பட்டு இதற்கு முன்னர் காணப்பட்ட அதே இடத்தில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான வார நாள்களில் பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும்.

பொதுமக்களின் கருத்துக்கள், பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்திறனான சேவையினூடாகத் திறம்பட தீர்த்து வைப்பதே பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் நோக்கமாகும்.

கடந்த காலத்தில் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அவ்வாறான யோசனைகள், முறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை உள்ளடக்கிய சுமார் 12 ஆயிரம் கடிதங்களுக்கு பிரிவின் தலையீட்டுடன் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, மேலதிக செயலாளர்களான சமிந்த குலரத்ன, ஹர் விஜேவர்தன, பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவிற்கு பொறுப்பான மேலதிக செயலாளர் நிசாந்த வீரசிங்க, அரச அதிகாரிகள், பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா மீது அமெரிக்காவின் பொருளாதாரத் தடை இறுகும்?

ரஷ்யாவிடமிருந்து எஸ் 400 ரக வான் பாதுகாப்பு அமைப்பை வாங்குவதால் இந்தியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து அமெரிக்காவில் இயங்கும் ‘கொங்கிரஸினல் ரிசர்ச் சர்வீஸ்’ என்ற அமைப்பு தயாரித்துள்ள அறிக்கையில், இந்தியாவில் அதிக சீர்திருத்தங்களை அமெரிக்கா விரும்புவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பாதுகாப்புத்துறையில் நேரடி அந்நிய முதலீடு குறித்து அந்நாடு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே எஸ் 400 வான்பாதுகாப்பு அமைப்பை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# இந்தியாவில் பல மாநிலங்களிலும் பரவுகின்றது பறவைக் காய்ச்சல்!





இமாச்சலப் பிரதேசத்தைத் தொடர்ந்து ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் கேரளாவில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இமாச்சலப் பிரதேசத்தில் வலசை வந்த வெளிநாட்டுப் பறவைகள் உயிரிழந்ததற்கு பறவைக் காய்ச்சலே காரணம் என்பது தெரியவந்துள்ளது. இதுவரை உயிரிழந்த 2400 பறவைகளில், பெரும்பாலானவை பட்டைதலை வாத்துகளாகும். பாங் அணைப்பகுதியில் இருந்து இறந்த 5 வாத்துகளின் உடல்கள் எடுக்கப்பட்டு, போபாலில் உள்ள ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதில், எச்5என்1 என்ற ஏவியன் இன்புளுவைன்சா வைரஸ் தாக்கியதால்தான் பறவைகள் உயிரிழந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அப்பகுதியில் சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கேரளாவில் கடந்த சில வாரங்களில் 12 ஆயிரத்துக்கும் அதிகமான வாத்துக்கள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளன. இதனால் அங்கு பறவைக் காய்ச்சல் இருப்பது உறுதியாகியுள்ளது. எனவே ஆலப்புழா மற்றும் கோட்டயம் பகுதியில் உள்ள பறவைகளில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பறவைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதால் இரு மாவட்டங்களிலும் 36 ஆயிரம் வாத்துக்களை கொல்ல அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

# சிறுவனுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த தாய் கேரளாவில் கைது!

கேரளாவில் மகனுக்கு பாலியல் தொல்லை அளித்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கேரள மாநிலம் வைக்கத்தில் பெண் ஒருவர் தன் நான்கு குழந்தைகளுடன் வசித்து வந்துள்ளார். இவரின், கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்துள்ளார். சில நாள்களுக்கு முன், பெண்ணின் 17 வயது சிறுவன், தாயாரின் செல்போனில் சந்தேகத்துக்குரிய விதமாக சில புகைப்படங்கள் இருப்பதை பார்த்துள்ளார்.

பின்னர், இது குறித்து உடனடியாக வெளிநாட்டில் வசிக்கும் தன் தந்தைக்கும் தகவல் தெரிவித்துள்ளார். உடனடியாக, வைக்கம் திரும்பிய தந்தை , தன் மகன்களிடம் விசாரித்துள்ளார். அப்போது, 14 வயது மகனுக்கு 4 ஆண்டுகளாக அந்த பெண் பாலியல் தொல்லை தந்திருப்பது தெரிய வந்தது.

இது தொடர்பாக, சைல்டு லைன் அமைப்பில் தந்தை புகாரளித்தார். தொடர்ந்து, சிறுவனுக்குக் கவுன்ஸிலிங் அளித்து (ஆற்றுகைப்படுத்தி) வாக்கு மூலம் பதிவு செய்தனர். பின்னர் சைல்டு லைன் அமைப்பினர் கடக்காவூர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். தொடர்ந்து, வைக்கத்தில் தன் வீட்டிலிருந்த அந்த பெண் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டு திருவனந்தபுரம் அருகேயுள்ள அட்டக்குலங்காரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



கேரளாவில் இப்படியொரு சம்பவம் குறித்து கேள்விப்பட்டதில்லை என்று சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

# பறவைக் காய்ச்சலை கேரளா மாநில பேரிடராக அறிவிப்பு!

திருவனந்தபுரம்,அன.05

கேரளாவில் கொரோனா பாதிப்பு குறையாத நிலையில் அங்கு தற்போது பறவை காய்ச்சல் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் கோட்டயம் மாவட்டத்தில் நீண்டூர் பகுதியிலும், ஆலப்புழா மாவட்டம் குட்டநாடு பஞ்சாயத்துக்குட்பட்ட எடத்துவா, பள்ளிப்பாடு, தாளவாடி, தழக்காகர ஆகிய பகுதிகளில் ஏராளமான கோழி மற்றும் வாத்து பண்ணைகள் உள்ளன.

ஒவ்வொரு பண்ணையிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகள் வளர்க்கப்பட்டன. சமீபத்தில் இந்த பறவைகள் நோய் வாய்ப்பட்டு இறந்தன. இதுபற்றி அறிந்த கால்நடைத்துறை அதிகாரிகள் இறந்த பறவைகளின் மாதிரிகளை சேகரித்து போபாலில் உள்ள தேசிய உயர் பாதுகாப்பு விலங்குகள் நோய் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு நடந்த ஆய்வில் பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. ஒருவித பக்டீரியாக்கள் மூலம் எச்.5, என்.8 வகை வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். கோட்டயம், ஆலப்புழா ஆகிய மாவட்டங்களில் பறவைக் காய்ச்சல் தீவிரமாக உள்ளதால், மாநில பேரிடராக கேரளா அரசு அறிவித்துள்ளது

## கேரள பறவைக் காய்ச்சல் மனிதருக்கும் பரவலாமாம்

### தமிழக சுகாதார செயலர் எச்சரிக்கை



சென்னை,ஜன.05

கேரளாவில் பரவியுள்ள பறவைக் காய்ச்சல் மனிதருக்கும் பரவலாம் என்று தமிழக சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழக சுகாதாரத்துறை செயலர் ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கேரளாவில் பரவியுள்ள பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கும் பரவ வாய்ப்பு உள்ளது. கேரளாவில் இருந்து வரும் வாகனங்கள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. வாகனங்களில் கிருமி நாசினி தெளித்த பிறகே அனுமதிக்கப்படுகின்றன.

தமிழகத்தில் பரவாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் இதுவரை 4 பேர் உருமாறிய கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். மழைக்காலம் என்பதால் டெங்கு பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# வெளிநாட்டில் வதியும் இந்தியர்கள் மின்னஞ்சல் முறையில் வாக்களிப்பு

## தேர்தல் ஆணையம் ஆராய அனுமதி

வெளிநாடு வாழ் இந்தியர்கள் தேர்தலில் மின்னணு முறையில் தபால் வாக்களிக்கும் நடைமுறை குறித்து ஆலோசனை நடத்தலாம் என தேர்தல் ஆணையத்திற்கு வெளியுறவு அமைச்சகம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

இது தொடர்பாக அனைத்து துறையினரிடமும் விரிவாக ஆலோசனை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்டப்படி வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இந்தியாவில் தங்களுடைய தொகுதிகளில் நேரில் வாக்களிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சகம் ஒப்புதல் வழங்கியதை அடுத்து தேர்தல் ஆணையம் இதுதொடர்பாக பல்வேறு அமைச்சகங்கள், துறைகளுடன் விரைவில் ஆலோசனை மேற்கொள்ள இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புதிய வகை கொரோனாத் தொற்றினால் இந்தியாவில் இதுவரை 47 பேர் பாதிப்பு

இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட புதிய வகை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது.

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள அனைத்து நபர்களும் மருத்துவ மையங்களில் உள்ள தனி அறைகளில் தொடர்புடைய மாநில அரசுகளால் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். அவர்களுடன் பயணம் செய்தவர்கள், குடும்ப தொடர்புகள் மற்றும் இதர நபர்களை கண்டறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், ஜீன் வகைப்படுத்தலுக்காக உறுதி செய்யப்பட்டுள்ள மாதிரிகள் பத்து ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# இந்தியத் தடுப்பூசியை வாங்குகிறது பிரேசில்

இந்தியாவில் தயாரிக்கப்படும் அஸ்ட்ராஜெனிகா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியை அவசரக்காலப் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்புதல் வழங்குவது தொடர்பாக பிரேசில் அரசு ஆலோசித்து வருகிறது.

பிரேசிலின் சுகாதார ஒழுங்குமுறை நிறுவனமான அன்விசா (Anvisa) மற்றும் Fiocruz நிறுவனம் இந்தியாவில் தயாரிக்கப்படும் கொரோனா தடுப்பூசியின் வீரியம் குறித்து சீரம் நிறுவனத்திடம் தகவல்களை கேட்டறிந்தது.

முன்னதாக பிரேசிலில் உள்ள சில தனியார் நிறுவனங்கள் இந்தியவின் பாரத் பயோடெக் நிறுவனத்திடம் இருந்து கொரோனா தடுப்பூசியை பெற ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

இம்மாத தொடக்கத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அஸ்ட்ராஜெனிகாவின் 2மில்லியன் கொரோனா தடுப்பூசி டோஸ்களை இறக்குமதி செய்ய பிரேசில் அரசு ஒப்புதல் வழங்கியது குறிப்பிடத்தக்கது.



# 20 வீதம் யுரேனியம் செறிவூட்டும் பணியை ஆரம்பித்துள்ளது ஈரான்!

அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி 20 சதவீதம் யுரேனியம் செறிவூட்டும் பணியை ஆரம்பித்துவிட்டதாக ஈரான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி உத்தரவின் பேரில் போர்ட்டோ நகரில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள அணு உலையில் 20 சதவீதம் யுரேனியம் செறிவூட்டும் பணிகள் ஆரம்பித்ததாக ஈரான் அரசின் செய்தித்தொடர்பாளர் கூறினார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்கவிருக்கும் சூழலில், அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் இணைய அவருக்கு நெருக்கடியை அதிகரிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறியமையையடுத்து ஈரான் மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான உறவு மிக மோசமடைந்துள்ளது.

ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடைகளை மீண்டும் புதுப்பித்தமை, ஈரான் உளவுப் படைத் தலைவர் காசிம் சுலைமானி கொலை, ஈரான் அணுசக்தி திட்டங்களுக்கு முன்னோடியான விஞ்ஞானி மோசென் ஃபக்ரிஸாதே தாக்குதல் என்பன ஈரானுக்கு கடும் நெருக்கடியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனைத்தொடர்ந்து, யுரேனியத்தை 20 சதவீதம் வரை செறிவூட்டுவது உள்ளிட்ட, ஈரான் அணுசக்தி




மையங்களைப் பார்வையிட சர்வதேச நிபுணர்களுக்கு அனுமதி மறுப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அடங்கிய சட்டமூலத்தை ஈரான் நாடாளுமன்றம் கடந்த டிசெம்பர் மாதம் நிறைவேற்றியது.

இந்த நிலையில், உளவுப் படைத் தலைவர் காசிம் சுலைமானி அமெரிக்காவால் படுகொலை செய்யப்பட்டதன் முதலாம் ஆண்டு நினைவு நாளான சனிக்கிழமை, யுரேனியத்தை 20 சதவீதம் வரை செறிவூட்டப்போவதாக ஈரான் அறிவித்தது. தற்போது அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணுசக்திக்குத் தேவையான யுரேனியம் எரிபொருளை 3.67 சதவீதத்துக்கும் மேல் செறிவூட்டக் கூடாது என்று ஈரானுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா உயிரிழப்பு ரஷ்யாவில் 59 ஆயிரத்தை தாண்டியது!



ரஷ்யாவில் கொரோனாத் தொற்றுப் பெருந்தொற்றால், மொத்தமாக இதுவரை 59 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, இதுவரை 59 ஆயிரத்து 506 பேர் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.


கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நான்காவது நாடாக விளங்கும் ரஷ்யாவில், இதுவரை மொத்தமாக 32 லட்சத்து 84 ஆயிரத்து 384 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் ரஷ்யாவில் 24 ஆயிரத்து 246 பேர் வைரஸ் தொற்றால் பாதிப்படைந்ததோடு, 518 பேர் உயிரிழந்துள்ளதாக, ரஷ்யாவின் கொரோனா வைரஸ் நெருக்கடியைக் கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஐந்து லட்சத்து 62 ஆயிரத்து 210 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுதவிர, ரஷ்யாவில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 26 லட்சத்து 62ஆயிரத்து 668 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

# அமெரிக்காவில் மீண்டும் 9 அடி உயர மர்மத் தூண் விஸ்கான்சின் மாகாண பூங்காவில் கண்டுபிடிப்பு!



அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் பூங்கா ஒன்றில் 9 அடி உயர உலோகத் தூண் ஒன்று மீண்டும் நிறுவப்பட்டுள்ளது.

மோனோலித் எனப்படும் இந்த மர்ம உலோகத்தூண் கடந்த ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி உடா பாலைவனத்தில் முதன் முறையாகத் தோன்றியது. தொடர்ந்து ருமேனியா, இங்கிலாந்து, நெதர்லாந்து, கொலம்பியா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, போலந்து என பல்வேறு நாடுகளில் இவை தோன்றின.

இந்த நிலையில் தற்போது மீண்டும் அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாண பூங்கா ஒன்றில் 9 அடி உயர உலோகத் தூண் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தூண் இரும்புக்கு பதிலாக அலுமினியம் மற்றும் பிளைவூட்டுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# அமெ. நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை தலைவராக நான்சி பெலோசி நான்காவது முறையாகவும் தேர்வு!

அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை (கீழவை) தலைவராக ஜனநாயக கட்சியின் மூத்த உறுப்பினரான நான்சி பெலோசி, நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பிரதிநிதிகள் சபை தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பில், தற்போதைய பிரதிநிதிகள் சபை தலைவரான ஜனநாயக கட்சியை சேர்ந்த 80 வயதான நான்சி பெலோசிக்கும் குடியரசு கட்சியின் கெவின் மெக்கர்த்திக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

பதிவான 427 வாக்குகளில் நான்சி பெலோசி 216 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். கெவின் மெக்கர்த்திக்கு 209 வாக்குகள் கிடைத்தன. செனட்டர் டாமி டக்வொர்த், ஹக்கீம் ஜெஃப்ரீஸ் ஆகியோருக்கு தலா ஒரு வாக்கு கிடைத்தது.

கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயக கட்சி 11 இடங்களை இழந்ததால் அக்கட்சிக்கு பிரதிநிதிகள் சபையில் 222 உறுப்பினர்கள் உள்ளனர். இருப்பினும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் 6 பேர் பெலோசிக்கு வாக்களிக்கவில்லை. ஆனால், 209 உறுப்பினர்களைக் கொண்ட குடியரசுக் கட்சியின் வாக்குகள் அனைத்தும் கெவின் மெக்கார்த்திக்கு கிடைத்தன.

இந்த வெற்றியின் மூலம் பிரதிநிதிகள் சபை தலைவராக நான்சி பெலோசி நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதைத்தொடர்ந்து,




மற்ற உறுப்பினர்களுக்கு அவர் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

2006 இல் பிரதிநிதிகள் சபை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் அந்தப் பதவியை வகித்த முதல் பெண் என்கிற பெருமையைப் பெற்றார்

நான்சி பெலோசி. 2006 முதல் 2011 வரை சபையை வழிநடத்திய அவர், 2018 ஆம் ஆண்டு முதல் மீண்டும் பிரதிநிதிகள் சபை தலைவராகப் பதவி வகித்து வருகிறார்.

# புதியவகை கொரோனா உலகுக்கு எச்சரிக்கை!



கொரோனாவைரஸை விட புதிய கொடூரமான வைரஸ் உலகைத் தாக்கக் கூடும் என்று ஆபிரிக்க விஞ்ஞானி ஜாக்குவஸ் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், உலகம் மிகக் கொடூரமான வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றும் அந்த எக்ஸ் எனப்படும் மர்ம நோய் கொரோனாவைவிட மிக வேகமாகப் பரவுவதாகவும் எபோலாவைவிட உயிர்க்கொல்லியாகவும் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

மனித குலம், மிக விரைவில் இன்னும் பல மோசமான வைரஸ் தாக்குதல்களை சந்திக்கக் கூடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஆபிரிக்காவின் மழைக்காடுகளில் இருந்து புதிய வைரஸ்கள் உருவாகி அது உலகம் முழுவதும் பரவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க அனுமதிக்கோம்!

**இஸ்ரேல் பிரதமர் விடாப்பிடி**



ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க இஸ்ரேல் அனுமதிக்காது என பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள அணு உலையில், 20 சதவீதம் யுரேனியம் செறிவூட்டலை ஆரம்பித்து விட்டதாக ஈரான் அறிவித்திருந்தது.

இதன் மூலம் கடந்த 2015 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட அணு ஆயுத ஒப்பந்தத்தை ஈரான் மீறிவிட்டதாக குற்றம் சாட்டிய இஸ்ரேல் பிரதமர், அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் வெற்றி அடைய ஒரு போதும் அனுமதிக்க முடியாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.


**கல்யாணமாலை**

**வட சர்வதேச திருமண சேவை**



**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1978.08.23
மதம் - இந்து V
நட்சத்திரம் - அச்சுவினி
செவ் - 7இல்
பாவம் - 22
கல்வி - A/L
தொழில் - சொந்தக்கடை
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1997.05.05
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி
பாவம் - 19 1/4
செவ் - 02இல்
கல்வி - A/L Bio
தொழில் - IDM Computer Engineer
எதிர்பார்ப்பு - UK, கனடா வெளிநாடு

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528

# உறவுகளை இழந்தவரின் வேதனை அனுபவப் பட்டால் மட்டுமே புரியும்!

## காணாமற்போனோர் உறவுகள் உருக்கம்



உறவுகளை இழந்து நிற்கும் அப்பாவி மக்களின் வேதனை என்னவென்று அனுபவப்பட்டிருந்தால் மட்டுமே அவர்களுக்கு புரிந்திருக்கும் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் பணிப்பாளர் பி.கருணாவதி தெரிவித்தள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமலாக்கப்பட்டமைக்குக் காரணமான அரசிடம் இருந்து எமக்கு நீதி கிடைக்காது என்பதை நன்கு உணர்ந்துள்ள நிலையில், நாம் ஐ.நா. மனித உரிமை பேரவை, ஐ.நா. பாதுகாப்பு சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் இருந்தே நீதியை எதிர்பார்த்து நிற்கிறோம்.

கடந்த 16.12.2019 அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி, காணாமல்போனவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்குவதுடன், குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பாகச் சிந்திக்க முடியும் என்றும் அவர்களை திருப்பி கொண்டுவர முடியாது என்றும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கூற்றுக்கு ஜெனிவாவில் நின்று எமக்காகக் குரல் கொடுக்கிறேன் என்று மக்களை ஏமாற்றும் தமிழ் அரசியல்வாதிகளும் அமைப்புகளும் என்ன பதிலடி கொடுத்தீர்கள்? எனவே எமது விடயத்தில் எம்மை கலந்தாலோசித்து எடுக்கும் முடிவுகளுக்கு மாத்திரமே நாம் ஆதரவு வழங்குவோம். இதுவரை எம்மை ஏமாற்றியவர்களை இனியும் நாம் நம்பப் போகின்றவர்கள் அல்லர். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் முறையாக கொண்டுசெல்லப்படும்!

## அமைச்சர் அலி சப்ரி உத்தரவாதம்

தடைப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகள் மீண்டும் முறையாக மேற்கொண்டுசெல்ல அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

கொவிட் இரண்டாம் அலை காரணமாக தடைப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் கொழும்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் ஊழியர்களுக்கு கொவிட் பாதுகாப்பு தொகுதிகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –



கொவிட் இரண்டாம் அலை காரணமாக கடந்த இரண்டு மாதங்களுக்கும் அதிககாலம் நீதிமன்ற நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள முடியாமல் போயிருந்தது.

அதனால் மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றோம். அதற்காக நீதிமன்ற சேவையில் இருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு கொவிட் சுகாதாரப் பாதுகாப்பு தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றமையை என்னால் அவதானிக்க முடிந்தது. குறிப்பாக கட்டடங்களுக்குத் தேவையான மீள் செப்பனிடும் நடவடிக்கை, காரியாலய காப்பக வசதிகள் மற்றும் மலசலகூடங்கள் உட்பட ஏனைய அடிப்படை வசதிகளை விரைவில் பூர்த்திசெய்ய அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கின்றேன். – என்றார்.

மேலும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சட்டத்தரணிகள் நீதிமன்ற பணியாட்தொகுதி ஊழியர்களுடன் கலந்துரையாடி தேவையான வசதிகள் தொடர்பாக இதன்போது அமைச்சர் ஆராய்ந்தார்.

# தொழிலாளர் சம்பள உயர்வு விடயத்தில் சதி செய்தால் போராட்டம் வெடிக்கும்!

## தொழிலாளர் இயக்கம் எச்சரிக்கை

தொழிலாளர்களுக்கு வெறும் 25 ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கான சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இடமளிக்க முடியாதென பெருந்தோட்ட தொழிலாளர் ஊதிய உரிமைக்கான இயக்கத்தின் செயற்பாட்டாளர் தங்கவேல் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

அதாவது அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாயும் 25 நாள்கள் வேலையும் அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் தொடர் போராட்டம் வெடிக்குமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஸ்கெலியாவில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே தங்கவேல் கணேசலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவும் 25 நாள்கள் வேலையும் வழங்கப்படவேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாகும்.

அதனை வென்றெடுப்பதற்காக ஆயிரம் ரூபா இயக்கம் உட்பட பல அமைப்புகளும் எம்முடன் கைகோர்த்துள்ளன. இதுவரை 20 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்துள்ளன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம் என்ற யோசனை 2014 இல் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டன. இதற்கு கம்பனிகள் உடன்படவில்லை. இழுத்தடிப்புகளுக்கு மத்தியில் வெறும் 20 ரூபாவே சம்பள உயர்வாக பெற்றுக்கொடுக்கப்பட்டது.

உற்பத்தி கொடுப்பனவு, வரவுக்கான கொடுப்பனவு, தேயிலை விலைக்கான கொடுப்பனவு போன்றன கம்பனிகளுக்கு சாதகமாக உள்ளன. எனவே, அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம் என்றே அன்று அமரர் ஆறுமுகன் தொண்டமான் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் கம்பனிகள் முன்வைத்துள்ள புதிய யோசனையில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. தேயிலை விலைக்கேற்ற கொடுப்பனவாக 25 ரூபா வழங்கப்படவுள்ளது. இதன்படி தற்போது 750 ரூபா சம்பளம் பெறுபவர்கள் 775 ரூபாவை பெறும் நிலை உருவாகும்.

அப்படியானால் வெறும் 25 ரூபாவை மட்டுமே சம்பள உயர்வாக பெற்றுக்கொடுப்பதற்கான மோசடிகள் இடம்பெறுகின்றன. இதற்கு உடன்படமுடியாது.

தொழிலாளர்களின் கோரிக்கை உரிய வகையில் நிறைவேற்றப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தொடர் போராட்டம் வெடிக்கும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# படைப்புழுக்களைக் கட்டுப்படுத்த சிக்கல் கொரோனாத் தொற்று பரவல் காரணமாக!

கொரோனா வைரஸ் பரவலானது, படைப்புழுக்களை கட்டுப்படுத்தும் பணிகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக விவசாயத்துறை அதிகாரிகள் உரிய துறைகளுக்குச் செல்ல முடியாமை, விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க முடியாது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எவ்வாறிருப்பினும் விவசாயத்துறை அதிகாரிகள் உரிய துறைகளுக்குச் சென்று, பயிர் நிலங்களை அவதானித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்ச்செய்கைகளில் படைப்புழுக்கள் தற்போது தாக்கம் செலுத்தியுள்ளன. இதன் காரணமாக தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2021இல் வெளியிடப்பெற்றது.